PR/2018/29/t

# ஜப்பான் தூதரகம்

இல. 20, ஸ்ரீமத் ஆர்.ஜி. சேனானாயக்க மாவத்த, கொழும்பு 7, இலங்கை
தொலைபேசி: 94-11-269-3831~3, தொலைநகல் : 94-11-269-8629
மின்னஞ்சல்: cultujpn@sltnet.lk

**ஊடக அறிக்கை**

**செப்டம்பர் 29, 2018**

**ரசிகர்களை பரவசத்தில் ஆழ்த்திய ஜப்பானிய இசைக் கலைஞர் சுமி கனேகோ**

ஜப்பானிய பாரம்பரிய இசைக்கருவிகளான கோடோ மற்றும் ஷாமிஷென் ஆகிய இசைக்கருவிகளை மீட்டுவதில் வல்லவரான இசைக்கலைஞர் சுமி கனேகோவின் இசை நிகழ்ச்சியை இலங்கைக்கான ஜப்பானியத் துாதரகம் செப்டம்பர் 28ம் திகதியன்று கொழும்பு பல்கலைக்கழக முகாமைத்துவம் மற்றும் நிதியியல் பீட கேட்போர் கூடத்தில் ஏற்பாடுசெய்திருந்தது.

நூற்றுக்கணக்கான ரசிகர்களை பார்வையாளர்களாக ஈர்த்திருந்த இந்த இசைநிகழ்ச்சியில் பங்கேற்றவர்கள் ஜப்பானிய பாரம்பரிய இசைக்கருவிகளின் இனிய நாதத்தை கேட்டு மகிழ்ச்சியில் ஆழ்ந்ததைக் காணமுடிந்தது. இந்த இசைநிகழ்ச்சியின் போது இசைக்கலைஞர் கனேகோ, இலங்கையின் புகழ்பூத்த கலைஞர் பண்டித் டபிள்யு. டி. அமரதேவவின் ‘சந்தே மே ரா யாமே’ எனும் பிரபல பாடலையை இசைத்து இலங்கை ரசிகர்களைக் கவர்ந்தார்.

செயல்முறைப் பயிற்சிகளுக்கான உபகரணங்களை மேம்படுத்துவதற்காக கொழும்பு பல்கலைக்கழகத்தின் ஸ்ரீபாலி பீடத்திலுள்ள வெகுஜன ஊடகக் கற்கைகள் திணைக்களத்திற்கு 12 லட்சம் ரூபா பெறுமதியான கலாசார மானிய உதவியை ஜப்பான அரசாங்கம் முன்னதாக வழங்கியிருந்தது.

இந்த இசை நிகழ்ச்சியானது ஜப்பான் மற்றும் கொழும்புப் பல்கலைக்கழகத்திற்கிடையிலான கூட்டுறவில் புதிய அத்தியாயத்தினை திறந்துவிட்டுள்ளது

***

மேலதீக விபரங்களுக்காக கலாசார பகுதியை தயதுசெய்து தொடர்புகொள்ளுங்கள்
தொலைபேசி: 011-269-3831~3 (ext.227)